# தாவரப்பூச்சி கொல்லிகள்

இந்தியாவில் அங்கக வேளாண்மை தற்பொழுது மிகவும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. அங்கக வேளாண்மை அதிக அளவில் பின்பற்ற வேண்டுமெனில் இடுபொருட்களின் செலவு குறைவாகவும் எளிதில் கிடைக்கக்கூடியதாகவும் இருத்தல் மிகவும் அவசியமான ஒன்று ஆகும். மேலும் வேளாண்மையில் அதிக கவனம் செலுத்த வேண்டிய பகுதி பயிர் பாதுகாப்பு அவற்றில் செயற்கையான இராசயண பூச்சிக் கொல்லிகள். எனவே இரசாயன கொல்லிகளை தவிர்த்து தாவரப் பூச்சிக்களை பயன்படுத்தலாம். ஏனெனில் இராசயன பூச்சிகொல்லிகள் மற்றும் பூசனகொல்லிகள் நச்சுத்தன்மை உடையவை. இவற்றில் உள்ள நச்சு எளிதில் சிதைவடைவதில்லை. இந்த நச்சுகள் மண், நீர், காற்று போன்றவற்றின மூலம் மனிதர்களை வந்தடைந்து உடல் நலத்தை பாதிக்கின்றன.

மேலும் பூச்சிகொல்லிகளுக்கு பூச்சிகள் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி கொள்கின்றன. உழவர்களின் நண்பர்களாக கருதப்படுகின்ற மண்புழு மற்றும் பூச்சிகளுக்கு இயற்கை எதிரிகளான தட்டான், வண்டுகள், குளவிகள், பொறிவண்டுகள், தேனீ. சிலந்தி போன்றவற்றையும் அழிக்கப்படுகின்றன.

தற்பொழுது பூச்சிகளை கட்டுபடுத்த வேம்பு, அரளி, சீமைக்கருவேல், நெய்வேலி காட்டாமணக்கு, நொச்சி, பூண்டு போன்ற இயற்கையில் கிடைக்கும். தாவங்களிலிருந்து தாவரப் பூச்சிகொல்லிகள் தயாரித்து பயன்படுத்த முக்கியத்துவம் தரப்படுகிறது.

நம் நாட்டில் இயற்கையாக வளரும் செடிகொடிகள் பலவற்றில் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தக்கூடிய ஆனால் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத ரசாயன பொருட்கள் மிகுந்துள்ளன.

**நன்மைகள்**

தாவரப்பூச்சி கொல்லிகள் பயன்படுத்துவதால் கீழ்கண்ட நன்மைகள் ஏற்படுகிறது.

1. எளிதில் கிடைக்கக்கூடியது
2. விலை குறைவானது
3. நஞ்சு எளிதில் சிதைவடையக்கூடியது
4. நன்மை செய்யும் பூச்சிகளுக்கும் பாலூட்டிகளுக்கும் தீங்கற்றது
5. சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது

## வேம்பு

வேம்பின் எல்லாப் பொருட்களும் பயிர்பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படுகிறது. அவை வேப்பிலை சாறு, வேப்பங்கொட்டை சாறு, வேப்ப எண்ணெய் கரைசல், வேப்பம் புண்ணாக்கு.

### அ. வேப்பிலை சாறு

அசுவினி, இலைப்பேன், வெள்ளை ஈ தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த வேப்ப இலை 10 கிலோ எடுத்து நன்கு அரைத்து கொள்ள வேண்டும். அரைத்த விழுதை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து வடிகட்டி தெளிக்கலாம்.

### ஆ. வேப்பங்கொட்டை சாறு

5 கிலோ வேப்பங்கொட்டையின் மேல் தோலை பொட்டை நீக்கி பருப்பினை எடுத்து கொள்ள வேண்டும் (திரட்சியானதாக இருப்பின் 3 கிலோ போதுமானது). இந்த பருப்பினை நன்றாக இடித்து தூள் செய்து கொள்ள வேண்டும். இந்த தூளை ஒரு சாக்குப்பையில் கட்டி 100 லிட்டர் தண்ணீரில் 8 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்னர் சாக்குப்பையினை பிழிந்து எடுத்து தூளாக்கிய காதிசோப்பு 300 கிராம் இட்டு கலக்கி பயிருக்கு தெளிக்கலாம். ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் கரைசல் தேவைப்படும். இச்சாறு வெள்ளைஈ, காய்ப்புழு, அசுவினி, இலைசுருட்டுப்புழு, குருத்துப்புழு, கதிர்வாய்பூச்சி, கதிர் உறை அழகல் நோய் தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்தும்.

### இ. வேப்ப எண்ணெய் கரைசல்

வேப்ப எண்ணெய் கரைசல் தயாரிக்க 500 கிராம் காதி சோப்பை எடுத்துக்கொண்டு 30 லிட்டர் தண்ணீரில் நன்கு கரைத்துக் கொள்ளவும். சோப்புக் கரைசலில் 3 லிட்டர் வேப்ப எண்ணெயை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி பால் போல ஆகும்படி கலக்க வேண்டும். எண்ணெய் பால் போன்று கரையாமல் பிரிந்து மிதந்தால் சிறிது சோப்புக் கரைசலை சேர்த்துக் கொள்ளவும். ஏனெனில் எண்ணெய் பிரிந்து இருந்தால் பயிரில் கருகல் போன்ற தீய விளைவுகளை ஏற்படுத்திவிடும். எண்ணெய் நன்கு கரைந்தவுடன் 70 லிட்டர் தண்ணீர் கரைசலுடன் சேர்த்து 100 லிட்டர் ஆக்கிக் கொள்ளவும். ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் கரைசல் தேவைப்படும். வேப்ப எண்ணெய் கரைசல் இலைப்பேன், பச்சைக் காய்ப்புழு, அசுவினி போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

### ஈ. வேப்பம் புண்ணாக்கு

வேரழுகல், நூற்புழுக்கள் மற்றும் ஆரம்பக் காலத்தில் தோன்றும் பூச்சிகளை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு விதைக்கும் முன்

அல்லது முதல் களையெடுக்கும் போது இட வேண்டும். தென்னையில் தஞ்சாவூர் வாடல் நோயை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு 5 கிலோ/மரம் இட வேண்டும்.

**சீமைக்கருவேல் மற்றும் நெய்வேலி காட்டாமணக்கு**

இலைச்சாறு 10 சதம் தயாரித்து மாலை வேளையில் தெளிப்பதனால் பாக்டீரியா இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்தலாம்.

(10 கிலோ இலையை அரைத்து விழுதாக்கி 100 லிட்டர் நீரில் கரைத்து வடிகட்டினால் 10 சதம் கரைசல்)

**சிரியாநங்கை மற்றும் அரிவாள்மனை பூண்டு**

ஒரு கிலோ மேற்கண்ட செடிகளின் ஏதேனும் ஒன்றின் இலையை 4 லிட்டர் நீரில் வேகவைத்து கிடைக்கும் கசாயத்தில் 500 மி.லி.யை 9.4 லிட்டர் தண்ணீரில் கலந்து இத்துடன் 100 மிலி. சோப்பு கரைசல் சேர்த்து தெளிக்கவும்.

இது குருத்து மற்றும் காய்ப்புழு, பழத்துளைப்பான், காய்த்துளைப்பான், தண்டுதுளைப்பான் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளான அசுவினி, பச்சைத் தத்துப்பூச்சி, வெள்ளை ஈ, மாவுப்பூச்சிகளையும் கட்டுப்படுத்தும்.

**வசம்பு**

15 கிராம் தூள் செய்யப்பட்ட வசம்பை 5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் சாறு உறிஞ்சும் பூச்சியான அசுவினியையும், இலையைத் தின்னக்கூடிய புழுக்களையம் கட்டுப்படுத்தலாம். வசம்புதானிய சேமிப்பு கிடங்குகளில் பூச்சிக்கொல்லியாக பயன்படுத்தப்படுகிறது.

**புங்கம் எண்ணெய்**

புங்கம் எண்ணெய் 3 சதம், புங்கம் விதைச்சாறு 5 சதம், கரைசலை பயன்படுத்தி அசுவினி மற்றும் புகையிலைப் புழுவைக் கட்டுப்படுத்த பயன்படுத்தலாம்.

**பூண்டு**

பூண்டு, சாறு உறிஞ்சும் பூச்சிகளான மாவுப்பூச்சி, செதில் பூச்சி போன்றவற்றை சிறந்த முறையில் கட்டுப்படுத்தும். மேலும் நூற்புழுக்களையும் கொல்லும் திறனுடையது. ஒரு லிட்டர் வேப்ப எண்ணையுடன் 250 கிராம் பூண்டை நசுக்கி ஒரு நாள் ஊறவைத்து பிறகு சோப்பு கரைசல் கலந்து தெளித்தால் சகல பூச்சி மற்றும் நோய்களை ஆரம்ப காலத்தில் கட்டுப்படுத்திவிடலாம்.

**பூண்டு + மிளகாய் + இஞ்சி சாறு**

13 கிராம் பூண்டு 9 கிராம் மிளகாய், 9 கிராம் இஞ்சி மூன்றையும் அரைத்து விழுதாக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். அதிலிருந்து 500 மி.லி மற்றும் 100 மி.லி. சோப்பு கரைசலை சேர்த்து 9.4 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். இக்கரைசலுக்கு சகல விதமான பூச்சிகள் மற்றும் புழுக்களும் கட்டுப்படுத்தப்படும்.